# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 25, சுபானு - திருவள்ளுவர் ஆண்டு 2034
## 2003 மே 8, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **திரு. அ. அருணாசலம்** அவர்கள் தலைமையில் காலை *10-00* மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:**

*"கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது*
*தூக்கங் கடிந்து செயல்"*

மனக் குழப்பமின்றி, தெளிவாக முடிவு செய்யப்பட்டு, ஒரு செயலை தளர்ச்சியும், தாமதமும் இடையே ஏற்படாமல் விரைந்து நிறைவேற்ற வேண்டும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

## 1. வினாக்கள்-விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் *401*, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**401—**

**தார்ச் சாலை அமைத்தல்**

***17985—திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சீர்காழி தொகுதி, சட்டநாதபுரம் ஊராட்சியிலிருந்து பனமங்களம், குமாரநத்தம், மருவத்தூர் வழியாக வைத்தீஸ்வரன்

[2003 மே 8

கோயில் செல்லும் சாலையை அகலப்படுத்தி, தார்ச் சாலையாக கிராமச் சாலைகள் திட்டத்தின்கீழ் நடைமுறைப்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) அரசின் நிதிநிலைமைக்கேற்ப வருங்காலங்களில், முன்னுரிமை அடிப்படையில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். சீர்காழி தொகுதி, சட்டநாதபுரம் ஊராட்சி அருகிலுள்ள பனமங்களம், குமாரநத்தம், மருவத்தூர் ஆகிய கிராமங்களில் பொதுமக்கள் சுமார் 6,000 நபர்கள் வசித்து வருகின்றனர். இதில், பெரும்பாலானோர் ஆதிதிராவிட மக்களும், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களும் ஆவார்கள். அவர்கள் சீர்காழி நகரத்திற்கோ அல்லது கோயில் ஸ்தலமான வைத்தீஸ்வரன் கோயிலுக்கோ செல்ல வேண்டுமானால், சுமார் 4 கிலோமீட்டர் தூரம் கால்நடையாக நடந்து செல்ல வேண்டிய மிகவும் கஷ்டமான நிலை உள்ளது. குறிப்பாக, பெண்களை பிரசவக் காலங்களில், இன்றும் கட்டிலில் தூக்கிக் கொண்டுதான் உப்பனாற்றைக் கடந்து சீர்காழி மருத்துவமனைக்குச் செல்கின்றனர். மழைக் காலங்களில், சாலைகள் சேறும், சகதியுமாக உள்ளதால், பொதுமக்கள், சீர்காழி நகரத்திற்கோ அல்லது வைத்தீஸ்வரன் கோயிலுக்கோ செல்ல முடியாத சூழ்நிலை உள்ளது. மேலும், இப்பகுதியிலுள்ள மாணவ மாணவிகளுக்கு, போக்குவாத்து வசதி இல்லாத காரணத்தினால், மேற்படிப்பைத் தொடர வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. எனவே மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, இப்பகுதியிலுள்ள ஆதிதிராவிட மக்கள் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், மாணவ மாணவிகளின் நலன் கருதி,

2003 மே 8]

சீர்காழி ஒன்றியம் சட்டநாதபுரத்திலிருந்து, பனமங்களம், குமாரநத்தம், மருவத்தூர் வழியாக வைத்தீஸ்வரன் கோயில் வரை செல்லும் மண் சாலையை, கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அகலப்படுத்தி, முன்னுரிமை அடிப்படையில், இந்த ஆண்டிலேயே தார்ச் சாலையாக மேம்பாடு செய்து கொடுக்க, அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலை, கும்பகோணம், சீர்காழி அரசு மாநில சாலை கிலோமீட்டர் 54/0-லிருந்து பிரிந்து, பனமங்களம், குமாரநத்தம், மருவத்தூர் வழியாக வைத்தீஸ்வரன் கோயிலில் இதே அரசு சாலையில் கிலோமீட்டர் 49/6-ல் இணைகிறது. இந்தச் சாலை 0/0 முதல் 6/0 கிலோ மீட்டர் வரையிலும் உள்ள சாலையாகும். இதில் 4/6 முதல் 6/6 வரை தார்ச் சாலையாக உள்ளது. மீதமுள்ள பகுதி, 0/0 முதல் 4/6 வரையிலுள்ள சாலையை மேம்பாடு செய்வதனால், சட்டநாதபுரம், பனமங்களம், குமாரநத்தம், மருவத்தூர் மற்றும் வைத்தீஸ்வரன் கோயில் ஆகிய கிராமங்கள் பயனடையும். ஏற்கெனவே, சட்டநாதபுரம், வைத்தீஸ்வரன் கோயில் கிராமங்கள் அரசு சாலையில் அமைந்துள்ளன. பனமங்களம், மருவத்தூர் கிராமங்கள், வரையறுக்கப்பட்ட கிராமங்களாக, 1991-ன் கணக்கெடுப்புப் புத்தகத்தில் இடம் பெறவில்லை. ஆனால் குமாரநத்தம் கிராமத்தின் மக்கள்தொகையான 235-ல் ஆதிதிராவிட மக்கள் தொகை 131 ஆக உள்ளது. இது 50 விழுக்காட்டிற்கு மிகுந்து உள்ளதால், இந்தச் சாலையைச் சிறப்புக் கூறுகள் திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்திடலாம். இந்தச் சாலை மேம்பாட்டிற்கு ரூ. 92 இலட்சம் தேவைப்படும். அரசின் நிதிநிலைமைக்கேற்ப, முன்னுரிமை அடிப்படையில், வருங்காலங்களில், இந்தச் சாலை வேலை எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 402, திருமதி மல்லிகா சின்னசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.